




ஓலை 131| ஓசை 254| ஜூலை 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



முனைவர் க.ப.அறவாணன்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅந் தற்றே
வழுவதூஉம் இல்லை விழுச்செல்வம்

## பொருள்

உழைக்கும் மனிதர்களே உலகத்தின் மையமாக இருக்கிறார்கள். அவர்கள் ஈட்டும் செல்வம் வழுவாது நிலைத்ததாகும். உழைப்பு செய்து ஈட்டிய செல்வம் எப்போதும் நன்மை தரும், அது வீண் செல்லாது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நீரகம் பொருந்திய ஊரகத் திரு!

**பாவகை : காவடிச் சிந்து**




வண்ணமின்றி வானவில்லு மில்லை - கார்
வண்ணமின்றி மழைமேக மில்லை -நீர்
வளமு மில்லாவூர்
வாழ வழியில்லை
அறிக - வாழ - தெரிக!

கோள்களின்றி விண்ணுலக மேது - செங்
கூர்கதிரு மிலாவுலக மேது - புவி
கோலு முயர்ந்திடாது
கோளும் சுழலாது
நீரு -மின்றி - பாரு!

மலையின்றி அருவியேது பாரு - வான
மழையின்றி அருவியாறா கூறு? - இரண்டும்
இல்லா ஊரிருந்தால்
இன்ப வாழ்வேது
நீரே -உயிரின் -வேரே!




நீர்வளமும் நிலவளமும் தானே - உயிர்
நிலைத்துவாழ சான்றாகுந் தானே - நன்
னீரும் இலாயிடத்தில்
நீயும் வாழாதே
நினைத்து -நீரைப் - பெருக்கு!

**இலக்கணக் குறிப்பு:**
மூச்சீ ரிரட்டைக்குப் பிறகு. முடுகும் தனிச்சீர் எடுப்பும் கொண்டவை. ஒவ்வொரு பாட்டின் முதலிரண்டு அடியின் ஈற்றுச் சீர்கள், தனிச் சொல் வருவதற்கு முன், ஈற்றடியின் மூன்று சீரிவ் முதல் சீரும் மூன்றாம் சீரும் இயைபுத் தொடையால் வருவதாகும்.

(மில்லை -மில்லை; அறிக தெரிக என்று முதல் பாட்டில் வந்துள்ளவைப் போல)

**நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்**

# சிந்தையைச் சீர் செய்!

பாவகை : குறள் வெண்பா

1. எண்ணம் நினைப்பதே ஏற்றமாய் வாழ்விலே
   திண்ணம் அமையும் திடம்.

2. நேர்மறை எண்ணமே நேர்வழிச் செல்லுமே
   சீர்பெற வாழ்தலே சித்து

3. நல்லதை நாளும் நயமுடன் எண்ணியே
   அல்லவை நீக்கல் அழகு

4. சிந்தனை தன்னையே சீர்தூக்கிப் பார்த்தே
   நிந்தனை நீக்கி நிமிர்.

5. எளிமையாய் வாழ்ந்தாலே ஏற்றம் பெறலாம்
   அளியுடன் வாழ்தல் அமைவு.

6. மடமை யகற்றியே மாற்றத்தைத் தேடிக்
   கடமையை ஆற்றிக் களி.

7. தன்னலம் கொண்டால் தடைகளே சூழ்ந்திடும்
   அன்பை நிறைத்தே அருள்.

8. மனதில் நிறைந்திடும் மாசை யகற்றி
   சினமின்றி வாழ்தலே சீர்.

9. உயர்வை விரும்பிடும் உன்னத எண்ணம்
   அயர்வினைப் போக்கும் அளப்பு


10. என்றும் மனதிலே ஏற்றம் விரும்பியே
    கன்றாய் உழைத்தால் களிப்பு.



கவிஞர் செ. கலைவாணி

சுவர் மீது தாவரம்
நீண்டு கொண்டே இருக்கிறது
கட்டிட நெரிசல்

பறவை எச்சம்
மண்ணில் மக்கவில்லை
நெகிழி



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

1.
என்ன எதிர்பார்க்கப்போகிறது
இந்த வாழ்க்கை
விழும்போது தாங்கிட கரங்களையும்
அழும்போது துடைத்திட
அன்பையும் தவிர.



2.
கணக்கற்று நீள்கின்றன
காணும் திசையெங்கும்
கைப்பேசிகளின் புத்துலகம்.
காணவே முடிவதில்லை
பொதுக்கழிப்பிடங்களின் கம்பீரம்.

3.
கொஞ்சம் அன்பு
கொஞ்சம் கெஞ்சல்
கொஞ்சம் கோபம்
கொஞ்சம் எதிர்பார்ப்பு
கொஞ்சம் ஊடல்
ஒட்டிக் கொண்டிருந்தாலே
எட்டிப் பார்ப்பதில்லை
எல்லையற்ற
பழியும் பாவமும்.

4.
எல்லோருக்கும் தெரிகிறது
எதிர்பார்ப்புகளின் அழுத்தம்
விடமுடியா ஆசையில்
தள்ளாட்ட நடை போடுகிறது
வாழ்வின் யதார்த்தம்

கவிஞர் இளையவன் சிவா

# இயற்கையின் விதிகள்

மாலைப்பொழுதொன்றில்
வானத்தை ரசிக்க
மேயவிட்டேன் பார்வையை
வெய்யிலுடன் தூறலும்
வானவில்லின் வர்ணஜாலமும்
பறவைகளின் குதூகலமும்
விருந்தாகின கண்களுக்கு
எதிர்பாரா நொடிப்பொழுதில்
குருவியொன்றை
கழுகு துரத்த
கண்ணுக்கெட்டிய
தூரம் வரைக்கும்
சிக்கிக்கொள்ளாமல்
பறந்து மறைந்தது
நிம்மதி பெருமூச்சுடன்
மகிழ்ச்சியில் நிறைந்தது மனசு
புலர்காலை பொழுதில்
குருவியின் இறகுகள்
பரவிக்கிடந்தன
வீட்டின் முற்றத்தில்
கண்களை மூடிக்கொண்டு
படபடத்த இதயத்தை
ஆற்றுப்படுத்தவே முடிந்தது
இயற்கையின் விதிகளை
எவர் மாற்றிட இயலும்?



கவிஞர் இளங்கோவன் மணியன்

# நாணுந் துறவுரைத்தல்

## அதிகாரம் : 114



காமநோய் கொண்டு
துன்புறுங் காதலனுக்கு.
காதலியின் அன்பையடைய
மடலேறலினும் வேறுவழியில்லையாமே.

காதல்தீயை தகிக்கவியலா
காதலனின் உடலோ.
நாணத்தை விட்டு
மடலேறத் துணியுமாமே.

காதலால் வெந்து
ஆண்மையையும் நாணத்தையும்.
துறந்ததின்பொருட்டு காதலன்
மடலேறிடத் துணிந்தானே.

நாணமும் வீரமுமெனும்
இரண்டு தெப்பங்களையும்.
காமமெனும் வெள்ளம்
அடித்துக் கொண்டோடுமே.

கைவளையணிந்த தலைவியெனும்
காதலியவள் காதலனுக்கு.
மாலைநேரத் துன்பத்தொடு
மடலையும் கொடுப்பவளே.

அடங்கா காதலின்பொருட்டு
காதலன் உறங்கிடானாமே.
அவன் நள்ளிரவிலும்
மடலேறுதலை நினைப்பவனாமே.

கடலளவு காமம்வருத்திடினும்
வெளிப்படுத்தாது அடக்கி.
மடலேறா மங்கையின்
பிறப்பே சிறந்ததாமே.

மங்கையரின் பெருங்காதல்
மனதால் அடக்கவியலாது.
மன்னவனின் பார்வையில்
வெளிப்பட்டு விடுமாமே.

யாரும் அறியவியலாதென
கருதிய காதலனின்காமம்.
தாமே வெளிப்பட்டு
வீதியில் உலவுமாமே.

காதலானவர் அருகிலில்லை
ஆகையாலுண்டான பிரிவுத்துன்பத்தை.
ஊரார் அறிந்திலராகையால்
எள்ளி நகையாடுகின்றனரே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# நட்பு

இணைபிரியா நட்பு
அன்பை நாளும் பொழியும்
இன்பமோ துன்பமோ
அனைத்திலும் கைகோர்க்கும்.
அரவணைக்க ஓடிவரும்
நாளும் கூடியே
நன்மைகள் பல செய்யும்.

நெஞ்சிலே குடிகொண்டு
வலிகளை மறைத்து
விழிகளை துடைத்து
வாழ வழிசெய்யும்
புனித மிகு நட்பே.

பார்வை பதிந்த
அன்பிலே நேசம்
அன்பெனும் பிணைப்பிலே
ஆனந்த ராகம்
வலிகளை மறந்திடவே
மருந்தாய் பாசம்
விருந்தாய் அமைவதே
நட்பின் அமுதம்
விடியலைத் தருமே
சிறந்த உறவு
உன்னத மொழியே
அன்பின் உருவமே
நட்போடு உறவாடுவோம்
நானிலம் உயர்ந்திடவே.



கவிஞர் எச். டீ. எச் பஹீதா, கொழும்பு

# கண்ணாமூச்சி

உன்னை பற்றி
நீ அறியாத போதும்
உனக்கான பாதையை
உருவாக்காத போதும்

உனக்குள் இருக்கும் திறமையை
வெளி கொண்டு வர
முயற்சி செய்யாத போதும்

உன்னையே சுற்றி வருபவரை
புரிந்து கொள்ளாத போதும்
உனக்கென்ற அடையாளத்தை
நிலைநாட்டாத போதும்

உனது வாழ்க்கையை
சரியான முறையில்
உபயோகபடுத்தாத போதும்

உன்னிடம் உள்ள
நல்ல குணங்களை வைத்து
பிறர்க்கு உதவாத போதும்
உமக்கான நேரத்தை
மற்றவர்க்கு செலவழித்த போதும்

வாழ்க்கையானது கண்களை கட்டிய
கண்ணாமூச்சி விளையாட்டு போல
இருளாகி போகிறதே.



கவிஞர் மோனிஷா

# வாசம்

அவர் மீதும்
நடை உடை பாவனைகளிலும்
வெளிநாட்டு வாசம்
எப்போதும் சுகமாய் வீசிக் கொண்டிருக்கும்.
அவரைச் சந்திக்கும்
தருணங்களில் எல்லாம்
என் மீதும் அவ்வாசம் வீசத்தொடங்கும்.

அவரின் நுனி நாக்கில்
ஆங்கிலம் சரளமாய்
ரசிக்கும்படி ஊஞ்சல் கட்டியாடிடும்.
அவ்வப்போது
என் ஆங்கிலத்தை மறக்காமல்
அவர் சரிசெய்வதும் உண்டு.

எனக்கும் அவர்க்கும்
வயது வித்தியாசம்
அதிகமென்று சொல்லமுடியாது.
எனக்கு நான்கு வயது இளையவர்.

அவரின் செழுமையடைந்த
அனுபவங்கள் நமக்கு
நிறைய செய்திகளை அள்ளித்தரும்.
கற்றுக்கொள்ளவும் கற்றுக்கொடுக்கவும்
இன்னும் நிறைய உள்ளது என்பார்.

அவரை ஆழ்ந்து அறிந்தவர்க்கு
உற்ற நண்பரவர்.
எளிதில் ஏமாறும்
மனம் படைத்த அவரை
ஏமாற்றத்தான் விழைகின்றனர்
எல்லோரும்.

அவரொரு அப்பாவி மனிதர்.
உங்களுக்கெல்லாம்
ஒன்றைச் சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.
அம்மனிதரை புரிந்து கொள்ளாத
நேசமற்ற நீங்கள் தான்
இம்மண்ணில் பெரும் துரதிஷ்டக்காரர்கள்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஒளியின் உயிர்

ஒளியும ஜீவனுமாக யேசு பிரான் ;
அருட்பெருஞ் ஜோதியாய் ஆண்டவர் ;
கண்காணும் தெய்வமாக சூரிய நாராயணன் !

ஒளியில்லையேல் இரவு பகல் ஏது ;
உலகோர்க்கு விடியல் தருவது ஒளியே !

ஒளியில்லையேல் தாவரத்திற்கு.உணவேது ;
ஒளிச்சேரிக்கையால் உணவாவது ஒளியே !

சூரியனால் தன்னம்பிக்கை தூண்டல் ;
மின்மினிப் பூச்சிகளும் மின்னும் ;
ஒளியை உருவாக்கம் செய்துவிட்டன !

நேர்க்கோட்டில் மட்டுமே பயணிக்கும் ஒளி !
ஒளிப்படக் கண்டுபிரிப்பின் ஆதாரம் இதுவே !

குவித்தால் ஒளிக்கற்றையாய் வெப்பம் தரும் ;
உருமாற்றம் கொண்டதால் மேலும் பயன்பாடு !

கூட்டுப் புழுவுக்கு இது புரிந்து விட்டது ;
பட்டுப் பூச்சியாய் மாறிவிட்டது !

ஒளிக்கதிர் சூழ்நிலை மாற்றும் ; பணபு நலம் சேர்க்கும் ;
உணர்வுகளைத் தூண்டும் ;
காதல் தேடும் காமம் புரியும் !

மனிதா நீயும் கூட அறமாய் ஒளிரலாம் ;
தெய்வச்சாயலும் கொள்ளலாம் ;
அறிவொளியைப் பிரதிபலிக்கலாம் செய்வாயா !



கவிஞர் ஆ சீ கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# இடைவெளி தேவைதானா



உயிருள்ள காந்தய் நீயும் நானும்
தூரத்து இடைவெளியிலும் மனங்கள் இணைகிறது
இடைவெளி குறைந்ததும் கரங்களை பற்றியது
முகத்திற்கு முகம் மூச்சுக்காற்று பரிமாற்றம்
இதழ்கள் நான்கும் ஈரப்பட்டு நனைததால்
என் இதயம் இரட்டிப்பாய் துடிக்கிறது
கொஞ்சம் சுவாசத்தை உறிஞ்சி எடுப்பாயா?
இதயம் இரண்டும் இளைப்பாறட்டும் கொஞ்சம்
எந்தன் தோளோடு நீ சாய்ந்ததால்
மார்கழிப் பணியும் சித்திரை உடலாய்
வியர்த்து கொட்டியது எனக்குள் உனக்கும்தான்
கண்கள் சொக்கி நினைவுகள் இழந்து
நிதானமில்லா சிரிப்பில் நீயும் நானும்
நிதர்சனம்தான் கனவில்லை
அதிகரித்தது மூச்சுக்காற்று.
இளைப்பாறிய தேகத்தில்
இடைவெளி தேவைதானா?

கவிஞர் செம்பை கிட்டு கிருஷ்ணன், புதுக்கோட்டை

# அஞ்சல் வரைந்தேன்



மனம் நிரப்பி சென்றாய்
முகம் காட்டாமல்.
அஞ்சல் வரைந்தேன்
முகவரி தெரியாமல்.
பேச முயற்சித்தேன்
யாரென்று தெரியாமல்
ஒரு தலைக் காதல்.

நீ நின்ற இடத்தில்
காற்று கரைகிறது.
மனம் காத்திருக்கிறது
வருகைக்காக.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# பூமாலையே தோள் சேரவா



பூந்தென்றல் காற்றே
பூபாளமான பாட்டே
ஈர்த்திடும் அழகே
ஈகையான உள்ளமே

மதிமயக்கும் மங்கையே
மன்னவனின் மார்பினிலே
கரம்கோர்த்து காதல்
காவியம் புனைந்திடவா

சிந்தனைச் சிறகடித்து
சிந்தையில் பறந்திடவா
உள்ளத்தில் உணர்வாகி
உறவாடிக் களிப்புற்றிடவா

உயிரின் நாதமாகியே
உன்மத்தம் ஆகிடவா
கனிந்த பொழுதுகளில்
கவிதை புனைந்திடவா

பூமாலையே தோள்
சேரவா நன்னாளிலே
மதுரசக் கிண்ணமே
குழிவிழுந்த கன்னமே

எந்நாளும் எண்ணமதில்
எனக்குள் இருப்பவளே
வாழ்வில் வசந்தமாய்
வஞ்சியின் வருகையே

கொஞ்சிடும் பைங்கிளியே
கருவிழியால் கவர்ந்தாயே
இரவுகள் இனிதாகும்
இனியவளின் அரவணைப்பினிலே

மஞ்சமதில் தஞ்சமே
மணவாட்டியின் நெஞ்சமே
நேசத்தில் நெகிழ்ந்திட
நேரமதை மறக்கிறேனே

கவிஞர் ஏப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# வீரம் சிறக்கும்

வீரத்தின் அடையாளம் வெற்றிக்கு வித்திட்டே
காரமாய் உரைத்திடும் காவியமாகவே விளங்கிடும
பலமாய் வளர்ந்த பண்பட்ட இதயமும்
நலமாய் சிறக்குமே நட்புடனே திகழுமே

உறுதியாய் கட்டிய உயர்ந்த கோபுரமும்
சிறுதும் அசையாமல் சிறப்பைக் கொண்டதே
உள்ளம் மகிழ்ந்தே உன்னதமாய் வளர்க்கும்
தெள்ளத் தெளிவாய் தெரியுமே தைரியமுமே

உடலை வருத்தாத உண்மை சிந்தையும்
கடலாய் திகழுமே களைப்பையும் போக்குமே
கடமையில் உயர்ந்த கண்ணிய வாழ்வில்
திடமாய் வெற்றியைத் திகைத்து தந்திடுமே

பன்னீர் ஒட்டிய பல்வண்ண மலராகவே
நன்னீர் நன்மையை நவின்றே அளிப்பாயே
மதியால் வென்ற மதுமதி உனையும்
கதியாய் திளைத்தேன் கருத்தில் நிலைத்தேன்

நட்பின் உறவாலே நன்மையைக்கூ ட்டியே
விட்டும் விலகாத விசித்திர கண்மணியே
அசத்தும் செயலாலே அளவிலா கருணையும்
பாசப் பிணைப்பாலே பண்பாகி சிறப்பாயே

கடலின் அலையாய் கவரும் கருணையாய்
உடலின் ஊக்கத்தாலே உளம்நிறைந்தே எழுவாயே
சொல்லும் விதமாய் சொர்க்கத்தைக் காட்டியே
வில்லாய் தொடுத்து விரும்பியே வருவாயே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# கொட்டித் தீராதக்காதல்

வானத்திற்கு எல்லை
சொல்ல முடியுமோ

தோன்றும் நதியின்
நீளம் அளப்பீரோ

காலைத் தழுவுவது
எத்தனையாவது அலை

கரும்பு இனிக்கிறதே
இனிமையின் அளவு

நந்தவனப் பூக்களில்
சுகந்தம் எதிலே

வீழ்ந்திடும் அருவியில்
எங்கே அழகு?

தொட்டுச் செல்லும்
தென்றலின் முழுமையோ

கொட்டித் தீராக்
காதலில் அகலமோ



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# புகைப்பட நினைவுகள்



என்றோ நாம் இருவரும்
எடுத்துக்கொண்ட
புகைப்படத்தை
இன்று பார்க்க நேர்கிறது.

இன்று நீ
எப்படி இருப்பாய்
என்றெல்லாம்
எனக்குத் தெரியாது.

எனக்கு நினைவில்
இருப்பதெல்லாம்
அன்று நாம் கடைசியாக
எடுத்துக் கொண்ட
புகைப்படத்தில் இருக்கும்
உன் முகம் மட்டுமே.

ஆம்!

நினைவுக் கிடங்கிலிருந்து
தொலைத்த உணர்வுகளைத்
தோண்டி எடுக்கிறேன்.

'மெமரீஸ்' என்ற பெயரில்
எனக்கிந்தப் புகைப்படம்
இன்று வந்திருக்கிறது
என்றால்

உனக்கும் அது
இதே நாளில்
இதே நேரத்தில்
நிச்சயம் வந்திருக்கக்கூடும்.

இந்த உலகத்தில்
ஏதோ ஒரு மூலையில்
இருக்கும் நீ
இப்புகைப்படத்தைப்
பார்க்கையில்
என்னவெல்லாம்
நினைத்திருப்பாய்?

எனக்குத் தெரியும்.

அங்கிருந்தே ஒரு சொட்டுக்
கண்ணீரை எனக்குக் கொடு.
நான் இங்கிருந்தே
பெற்றுக் கொள்கிறேன்.

கவிஞர் மதுரகவி, வண்டியூர் (மதுரை)

# ஔவை வழி வாழ்வியல்

அன்பாய் இரு
ஆணவம் கொள்ளாதே
இயன்றதை செய்
ஈர மனம் கொள்
உழைத்திடு ஓய்வின்றி
ஊர் போற்ற நட
எளிமையுடன் இரு
ஏற்றம் பல காண்
ஐயம் எதிர்த்திடு
ஒழுக்கம் பழகு
ஓடு நதி போல
ஔடதம் தவிர்
ஃ ஆயுதம் விலக்கு

கடமை தவறாதே
காரியத்தில் கண்
கிடைப்பதில் மகிழ்
கீழ்மை தவிர்
குணம் மாறா நட
கூடி வாழ பழகு
கெடுதல் ஒழி
கேள்வி ஞானம் கொள்
கைத்தொழில் கல்
கொள்கை கடைபிடி
கோபம் குறைத்திடு
கௌணம் மூழ்காதே



கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# சிறையை உடைத்தே சிறகடி

அறையில் அடைத்து வைத்தால் அடங்காதே
சிறையாய் எண்ணி வருந்தியே முடங்காதே
உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும்
அச்சமில்லை என்ற பாடலை மறவாதே
வேப்பமரக் கிளையிலே பேயொன்று ஆடுதென்றால்
காப்பீர் என்று அலறாதே தம்பி
வீரத்தை முளையிலேயே கிள்ளி வைத்தாலும்
தீரனே நானென்று உலகோர்க்குச் சொல்லிவை
அச்சம் ஊட்டுபவரின் உறவைத் தள்ளிவை
உச்சஞ்தொடும் உணர்வை உனக்குள் அள்ளிவை
அறியாமை நீக்கும் கல்விப்பால் அருந்து
அறிவொளி என்றும் வாழ்க்கைக்கு விருந்து
கூட்டுப் புழுதான் வலிகள் கடந்து
நாட்டம் கொள்ளும் வண்ணத்துப் பூச்சியானது
சிறையை என்றும் தடையாய் எண்ணாதே
பிறையாய் உன்னை வானில் ஏற்றும்
அறியா முகமாய் கிடந்து வாடாமல்
அறிமுகமாகி செயல் நடத்திச் சென்றிடு/
மறைமுகமாய் திறன் வளர்க்கும் கூடம்
துறைமுகமாய் மாற்றி வாழ்வில் உயரக்கூடும்.
சிந்தை விரித்து செய்திடு புரட்சி
பந்தமாய் உனக்கே வந்திடும் அரசாட்சி
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?
அடிப்படை வெற்றியும் உன்பெயர் சொல்லும்.



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# தாக்கம் இல்லாத களம் ஒன்று

தாக்கம் இல்லாத களம் ஒன்று
காவியங்கள் படைக்கிறது

பழுத்த பழம் விழாது போனாலும்
பட்ட நிழல் கவிதை ஆகுமே!
நுனிக் கண்கள் சிந்தும் மை இன்றி
நெஞ்சின் உருகுதலை சுவைத்திடும்.
கூச்சமின்றி காகிதம் நனைக்கும்
கோடற்ற கேள்விக்கே விடையெனும்.
சத்தமின்றி சாயலை விதைக்கும்
தாயொன்று போலக் கலமொரு கை.
வாய்மொழி வேண்டா வாசகங்கள்
வெண்மையின் மேலே கவியாவனே!
கீறாதே களங்களை எழுதும்
கீதம் போலவே எழுத்தாணி!
சத்தமின்றித் தாக்கமெனும் சாயலை
சிறகென எழுதி வரும் சிலைகள்!
தாக்கமின்றி நூல்களாய் நிமிரும்
தாள் மீதோர் கருவிதான் காவியம்!



கவிஞர் திருமதி சினேஹா வினய், சென்னை

# உன் முகமே

என்னுள்ளம் என்னவென்று
உன்னை தவிர யாரும்
அறிந்திட இயலாது

கவலை
மகிழ்ச்சி
எல்லாம்
உன் முகமே தவிர
வேறொன்றுமில்லை

உன் சிறு புன்னகைப் போதும்
மனதின் ஆழம் வரை
கவலைகளால்
நிரம்பி இருந்தாலும்
மகிழ்ச்சி ஊற்றாய்
பெருக்கெடுக்கும்
நிம்மதி சுவை சேர்க்கும்

சிரித்து கொண்டே இரு
நான் அதில் தான்
வாழ்கிறேன்.



கவிஞர் சஹாராக்கவிஞன், திருப்பூர்

# ஆடி மாதம்

ஆடி மாதத்தில் அம்மன்
அருளைப்பெற வேப்பிலையாய்
மக்கள் கூட்டம்

ஆடிக் காற்றில் மரங்கள்
எல்லாம் நீண்ட பெருமூச்சுடன்
உற்சாகமாய்

நீர் நிலைகள் எல்லாம்
மனிதர்கள் கால் பட்டு
மூச்சுத்திணறலாய்

ஆம் இறந்த போனவர்களின்
முகவரி தேடும் முகங்களாய்
நீரோடைகள்

காக்கைகளின் ஒருநாள்
உணவுத் திருவிழா
ஆடி அமாவாசையில் அறுவையாய்

ஆலயங்களில் பெண்மையின்
சத்தங்கள் மணியோசையின்
கூக்குரலாய்

ஆடி மாதம் வறியோரின்
ஒருவேளை பசி போக்கும்
ஆனந்த மாதமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நீ என்னும் நான்

சிற்றெறும்பாய் நான்
உடைந்த காலுடன்
ஊர்ந்து திரிகையில்
கரும்பைக் காட்டி என்னை
விருப்ப வைத்தவள் நீ!
***
சிட்டுக்குருவியாய் நான்
சிறகுடைந்த பறவையாகி
பாட்டுக் கேட்டுப் பாரில்
அலைந்து திரிகையில்
மெட்டுத் தந்தென்னை
மெல்லப் பாட வைத்தவள் நீ!
***
யார் நீ?
யாதுமாகி நிற்பவளே!
யார் நீ நாதனை?
நதியாகி வருபவளே!
யார் நீ?
பொதிகையாகிச் சுரப்பவளே
யார் நீ?
மதியாகிச் சுடர்பவளே
யார் நீ?
நீ என்னும் நானாகி
உயிர் தருபவளே!



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், ஈழு(ம்) வள நாடு

# பயணங்கள் முடிவதில்லை

உதிக்கின்ற கதிரவனின்
பயணங்கள் முடிவதில்லை
நிலவின் பயணமும்
முடிவின்றி தொடர்கிறது
பூக்கின்ற பூக்கள்
பூத்து பயணத்தை தொடங்கி
காயாகி கனியாகி
கனியில் விதையாகி
விதை மண்ணில் விழுந்து
செடியாகி முடிவில்லா
பயணத்தை தொடர்கிறது

அயலகப் பறவைகளின்
தொடர் பயணங்கள்
எல்லா நாடுகளிலும்
முடிவின்றி தொடர்கிறது
கருவறையில் தொடங்கும்
மனிதனின் பயணம்
கல்லறையில் முடிவதில்லை
அதையும் தாண்டி
காற்றோடு காற்றாக
முடிவின்றி தொடர்கிறது.
ஏழு தலைமுறை வாழ்வாக
மனிதனின்
பயணங்கள் முடிவதில்லை



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# ஆண் மகன் நானும்

ஆண் மகன் நானும்
என்னவளுக்கு என் பாலூட்டினேன்

பிரசவ அறையில்
என் அழகு தேவதையை
நான் ஆசையோடு வாங்கினேன்

முதல் முறையாக
அவளை பார்த்த
என் புலன் ஐந்தும்
ஆனந்த கூத்தாட

என் ஆனந்த கண்ணீர்
அவள்மேல் பட்டதும்
அழகாக அழுதாள்

அழுதவளை அமைதி படுத்த
என் மார்போடு
அணைத்துக் கொண்டேன்

அடுத்த கணமே
ஆண் மகன் என் மார்பிலும்
பால் சுரந்தது

அவள் பாலை பருகி
பசி ஆற்றிக் கொண்டாள்

என் உடல் எங்கும் சிலுர்க்க
எட்டாவது உலக அதிசயத்தை
எட்டி பிடித்த ஆனந்தம் எனக்கு



கவிஞர் புன்னகை தீரன் இரா. சங்கர், ஈரோடு

# உலகைச் சிதைக்கும் ஆயுத உற்பத்தி

விரட்டும் குளிரை
துரத்தி அடிக்க

சிக்கிமுக்கி கல்லை
பற்ற வைத்து

அவசியத் தேவைக்கு
ஆதி மனிதன்

தன்னைப் பேணிட
தொடுத்தான் யுத்தம்!

மேகப் பொதியை
மொத்தமாய் கொளுத்தி

நீல நதி
வறண்டு போகிட

காற்றில் பரவும்
மகரந்தம் எரிக்க

கானகம் தின்று
பாலைவனம் ஆக்கிட

பூமி எங்கும்
நஞ்சுமழை பெய்திட

உலகைச் சிதைக்கும்
ஆயுத உற்பத்தி!



கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# விருந்து

அனைவருக்கும் இது விருந்து.
அருந்தியதும் வேண்டும் மருந்து.

வருந்தி வேண்டினாலும்
வேண்டாம் எனக்கு.

கண்டாலே வேண்டும்
மருந்து எனக்கு

மருந்தே விருந்து எனக்கு.

விரும்பும் விருந்து
வேண்டாம் எனக்கு.



கவிஞர் சசிகலா விஸ்வநாத்

# நாளைய உலகம் இளைஞர்கள் கையில்



நாளை இந்த உலகை
ஆளப்போகும் சக்தி
இளைஞனின் கையில்.

மாற்றம் ஒன்றே மாறாதது என
மனம் படைத்த சக்தி
இளைஞர்களின் கனவாய்
மாறப்போவது சாட்சி.

புதுயுகம் படைத்து பூவுலகை காக்கும்
புதுமைகள் கண்டு புரட்சிகளை உருவாக்கும்
புதுமை இளைஞன் இங்கே.

உணவு படைக்கும் தொழிலாளர்கள்
உயர்வு பெறும் காலம்
உழவுத் தொழிலாய் போற்றும்
காலம் வந்திடுமே.

நல்லரசு கண்டு வல்லரசாய் மாற்றிட
காலத்தின் தேவையே
இளைஞர்கள் என்பது உண்மையே.

மருத்துவமும் கல்வியும்
அனைவருக்கும் பொதுவென
ஆக்கிடும் காலமும்
கனிந்திடும் உண்மையே.

உழைப்பவனே உயர்ந்தவனாய்
போற்றிடும் நாட்டிலே
ஏய்ப்பவன் ஒழிந்திட
சட்டங்கள் பிறக்குமே.

புரட்சியும் புதுமைகளும்
நாட்டிலே பூத்திட
நாளைய உலகம்
இளைஞர்கள் கையிலே.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# ஆடி மாதம்

ஆடி மாதம் அம்மன் மாதமே!
புனித நதிகளில் நீராட
துன்பங்கள் விலகும் மாதம்.
அம்பாளை வணங்க
பூர்வ ஜென்ம பாவங்கள் விலகும்.

மலையரசன் பார்வதி தேவியை
மகளாக அவதாரம் பெற்ற நாள்.
ஆண்டாள் அவதாரம் எடுத்த
மாதமும் இதுவே!

ஹயக்ரீவர் வேதங்களை
மீட்டுத் தந்த மாதமும் இதுவே!
ஆடி கிருத்திகையும், அமாவாசையும்
இம்மாதத்தில் வரும் முக்கிய நாட்களே

ஆடி செவ்வாய் தேடி குளி
"ஆடிப்பட்டம் தேடி விதை"
"ஆடி காற்றில் அம்மியும் பறக்குமே"
இது எல்லாம் ஆடி மாத பழமொழிகளே!
வெயில், மழை, காற்று இம்மூன்றுமே
நிகழக்கூடிய மாதம்.
சூட்சுமம் நிறைந்த மாதம் .

அம்மனுக்கு கூழ் வார்த்தலும்,
மாவிளக்கு ஏற்றுதலும் மிகச் சிறப்பானதே!
ஆடிப்பூரத்தில் அம்மனுக்கு
வளையல்கள் சாற்றுவதும் உண்டே!

எலுமிச்சை பழ மாலையும்,
வேப்பிலையும் விசேஷமானதே !
ஆடி பௌர்ணமியில் சிவசக்தி
அருள் கிடைக்கும் நாளே!



ஆடி பதினெட்டில் ஆற்றங்கரையில்
ஆற்றில் பூஜை செய்து அம்மனை வழிபட்டு
கன்னிப்பெண்கள்
நல்ல கணவன் அமைய வேண்டியும்,
விவசாயிகள் விளைச்சலை
நன்றாக தர வேண்டும் என்றும்
பூஜைகள் செய்து வழிபடும் நாளும் இதுவே!

வரலட்சுமி விரதமும்
இம்மாத விசேஷங்களில் ஒன்றாகுமே!
அம்மன் ஆலயம் சென்று
அனைத்து நலன்களையும் பெறுவோமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அழகுக்கலை நிபுணர்

முடியும் திருத்திடுவார்
முகந்தனை அழகுமாக்கிடுவார்

அமர்ந்த இடத்தினிலே
அனைவரையும் அழகாக்கி மகிழ்ந்திடுவார்

கண்ணாடி முன்பு அமரவைத்தே
கதைகள் பல பேசிடுவார்

நாளிதழ்களைக் கரங்களில் தந்து
காத்திருப்பைப் போக்கிடுவார்

ஏழையாயினும்
பணம் படைத்தோராயினும்

இவரிடம் சென்றிட
தலை குனிந்தே அமர்ந்திடுவார்

அவரவர் விருப்பமறிந்து
அவரின் பணியினை
திறம்பட செய்திடுவார்

மழலையையும் முதியோரையும்
மனமகிழ செய்திடுவார்

வாடிக்கையாளரின் மகிழ்வுக்காக
வாஞ்சையுடனே நடந்திடுவார்



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நடன மங்கை

இசைக்கேற்ப ஆடும் விழிகள்
நயனங்கள் மொழியும்
விரல் புரியும் வித்தையில்
இடைதாண்டிய
கார்குழலும் இணைந்தாடி
மகிழும்
பாதக்கொலுசும்
பலமொழி பேசிடும்
முகத்திலாடும் நவசரத்தில்
முகிலணங்கள் மோகத்திலே
சிவந்த இதழும்
சிறுநகைக்கூட்டமும்
சிதறாத செவ்வந்தி
புன்னகையில்
சதிராடும் நடனம்
அசையாத மனமும்
துள்ளிடும் ராகத்திலே
சுகராமிசைக்கும்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டணம்)

## கடைசியாய்



பேசு பொருளின்
தீவிரத் தன்மையையும்
முக்கியத்துவத்துவத்தையும்
கருத்தில் கொண்டு
புரிதல் ஏற்பட
வேண்டியதெளிவான
விளக்கம் கொடுத்தபின்பும்
யதார்த்த உதாரணங்கள்
காட்டிய பின்பும்
கேட்பவர்
செவி மட்டும் கொடுத்து

புத்திக்கும் மனதுக்கும்
கொண்டு செல்லாமல்

சொன்னதையே சொன்னால்
இறுதியாய் உரைப்பது

இனி சொல்வதற்கு
ஒன்றும் இல்லை

**************************

## அதுக்குப்பிறகு

ஒரே ஒரு
யோசனைக்கு
செயலுக்கு
தன் திருப்தி
சரி என ஆமோதிப்பு
நன்று என்ற அங்கீகாரம்
தொடரு என ஊக்குவிப்பு
என நிகழ்ந்த பின்னே

பாக்கி பணி பற்றிய பதற்றம்
நாளையவை பற்றிய பயம்

எண்ணியது நடக்கவில்லை
எனில்
என்ன செய்வது
என்ற குழப்பம்
மனதில் இருந்து மறையும்
தற்காலிகமாவது

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# இதயத்தில் இடம் பிடித்தவளே!



என்னைக் கவர்ந்திட்டக் கன்னிப்பெண்ணே
எந்தன் இதயத்தில் இடம்பிடித்தவளே
இரவாக்காதலை நெஞ்சில் விதைத்தவளே
அனுதினமும் எனது மனசில் நிறைந்தவளே

அழகான பௌர்ணமி நிலவு முகத்தினளே
பாசமும் நேசமும் என்மீது வைத்தவளே
மலர்வனத்தில் மலர்ந்த வாசமிகு முல்லையே
வாழ்வினில் வளம்கொழுத்திட வரமளிப்பவளே

வாழும் காலத்தில்தான் தாரமாக வந்தவளே
இல்லறத்தில் நல்லறம் என்றும் தருபவளே
என்சிந்தையில் நின்று கவிப்பல நல்கிடு
நெஞ்சினில் தினம் பூத்திடும் மலராகிடு.

கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)

ஏழையின் சிரிப்பில்
எப்படி பார்த்தாலும்
ஏழ்மை தெரியவில்லை
***

பறவை இறகை விரிக்க காத்திருந்தேன்
படம் பிடிக்க
விரித்தபின்
அந்த எண்ணமே இல்லை
***

பொறுமைக்கு எல்லையில்லை
இருந்தாலது
பொறுமையில்லை
***

இது சரியான பாதைதான்
ஆனாலும் யாரும் மெச்ச போவதில்லை
பல கோடி பேர் நடந்துவிட்டனர்
இந்த பாதையில்
***

நிறுவனத்தில் வேலை செய்வது
பணத்திற்காக தானே
குணத்தை தேடி
எதற்கிந்த கோபம்
***

இசை
காற்றின்
பசை
***

க்ளீன் ஷேவ் செய்து கொண்டும்
ஆன்மீக ஈடுபாடு கொள்ளலாம்
உதாரணம் ஏ ஆர் ரஹ்மான்
***



ஒற்றை சொல்லில் உலகம்
பெண்
***

சொந்த மகள்
தந்தையை வெறுப்பதை விட
அதீத வலி
இந்த உலகில் இல்லை
***

இரட்டை பதில் அளித்தால்
எது பின்னர் சரியோ
அதில் ஒட்டிக்கொள்ளலாம்
என்றவாறு சிலர்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# தமிழே விதையாய்!


முச்சங்கம் கண்ட மூத்த தமிழ்மொழியே!
எத்தனை மொழிகள் இந்நாட்டில் இருந்தாலும்,
அத்தனைக்கும் மூலமே!அன்னைத் தமிழே!
காப்பியங்கள் ஐந்தோடு, இலக்கணம், இலக்கியமும்,
முப்பாலில் உலகியலை உரைத்திட்ட வள்ளுவமும்
செப்பிடுமே உந்தன் தொன்மைத் தன்மையினை!
செந்தமிழைச் செவிமடுக்க, இன்பத்தேன் பாய்ந்திடுமே!
விருட்சத்தின் விழுதுகளாய்த் தரமான படைப்புகளை
பெற்று உயர்ந்திருக்கும் , பெருமைமிகு தமிழ்மொழியே!
கற்பனைகள் ஊற்றெடுக்க, நற்றுணையாய் நீயிருந்து
நித்தம் புதுப்புது கவிகள் படைத்திடவே
வித்தாய் என்னுள் விளங்காயோ தமிழே!




கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# கர்மவீரர் காமராசர்

வா! வா! என் தலைவா! - மீண்டும்
வா! வா! என் தலைவா!
ஏட்டில் மட்டுமே உனைக் காண்கின்றோம்
பாட்டில் மட்டுமே உனை இரசிக்கின்றோம்
அதிசயமாய் உனை நினைக்கின்றோம்
அதிசயமே உனைக் காணத் தவிக்கின்றோம்.
வா! வா! என் தலைவா! - மீண்டும்
வா!வா!என் தலைவா!
ஆரம்பப் பள்ளியும் உன்னாலே! - அதில்
மதிய உணவும் உன்னாலே!
பள்ளிகள் உயர்ந்ததும் உன்னாலே! - அதில்
சீருடை வந்ததும் உன்னாலே!,
தமிழ் ஆட்சிமொழி ஆனதும் உன்னாலே! - அதில்
நிதிநிலை அறிக்கையும் உன்னாலே!,
தமிழ் ஆராய்ச்சி மன்றமும் உன்னாலே! - அதில்
கலைச்சொற்கள் உருவானதும் உன்னாலே,
தொழில்துறை வளர்ச்சியும் உன்னாலே! - அதில்
தமிழகம் வளர்ந்ததும் உன்னாலே!
நீர்த்தேக்க அணைகளும் உன்னாலே! - அதில்
மின்சார உற்பத்தியும் உன்னாலே!
உன் சாதனைகள் பலவும் அறிந்தோமே!
உன் தன்னலமில்லா உள்ளம் புரிந்தோமே!
"நேர்மையின் இலக்கணம்" நீ என்று - அறிந்து
நாங்கள், ஏந்தி வந்தோமே பூச்செண்டு
வா! வா! என் தலைவா! - மீண்டும்
வா! வா! என் தலைவா!



கவிஞர் தி. அருள் ஞானப்பிரகாசம், சேத்தியாத்தோப்பு

புதிதாய் ஒரு பயணம்
பல சித்தாந்தங்களுடன்
ஆம் என்று அறியும் முன் அவள்
நீண்ட நாள் அன்பு போல்
அவளின் சிறு புன்னகை
பெரும் மருந்தாக அன்று
மனம் ஆயிரம் மாற்றம் பெற்றது
ஏனோ புரியாமல்
அவள் பார்வை மட்டும் தொடர்ந்தது
அறிந்து கொள்ள முடியாத தொடராக
தினம் தினம் அவளின் ஆக்கம்
ஏதோ தனிமையின் தாக்கம்
அவள் பார்வை தீண்டல் மட்டும்
என்னுள் உறக்கம் இல்லாமல்
என் உருவம் களைத்தது
கனவிலும் நினைவிலும் தினம்
அவளின் கூற்று விடையறிய
தொடர்ந்து கொண்டே இருக்கிறது
ஆம்
பெண்ணே என்னவளாக உன் எண்ணம் என்ன
ஏனோ நான் மாய பிம்பத்தில்
உன் ஒவ்வமாக
முடிவில்லா காவியமாகவே தொடர்கிறது
எந்தன் காதல் கண்மணியே!
உன் விஞ்ஞான விந்தையறிய
நான் ஒரு விளையாட்டு
சிறுவனாக தொடர்கிறேன்
என் காதலை கலங்கரை வென்ற காவியமாக
கண்மணியே உன் காதல்
ஊடலை அறிய
காத்துக் கொண்டிருக்கிறேன்.
தொடரும்!



கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்

முதன் முறையாக சிங்கப்பூர்

அத்தியாயம் 20

(புதினம்)

அரசு ஏர்போர்ட்டில் வந்திறங்கிய போது திலக் வெளியே காத்திருந்தான். "வாப்பா அரசு, எப்படி இருக்கிறாய்?" என்று அழைத்தான்.

"திலக் ஏன் வேலையெல்லாம் போட்டுவிட்டு சும்மா இங்கேயெல்லாம் வந்தாய்! ஏதோ வியாபாரத்தை தொடங்கி வைக்க உதவினாய். அதன் மூலம் முதன் முறையாக சிங்கப்பூர் போகிறேன் என்பதால் உன்னிடம் போன் பண்ணிச் சொன்னேன்."



"மற்றபடி ஏர் போர்ட்டுக் கெல்லாம் உன்னை வீணாக அலையச் சொன்னது? மற்றபடி வியாபாரம் எப்படி இருக்கிறது? வெளிநாட்டு ஆர்டர் ஏதாவது உண்டா?" அரசு திலக்கை கட்டி அணைத்தபடி கேட்டான்.

"எங்கே வெளிநாட்டு ஆர்டருக்கு ஓடுறது.... நீ போட்டு அனுப்புகிற வெளிநாட்டு எல்.சி. களுக்கே என்னாலே சப்ளை பண்ண முடிய வில்லை. உண்மையிலே உன் வளர்ச்சி என்னைத் திகைக்க வைக்கிறது அரசு.ஏதோ ஒரு தீர்மானமில்லாமல் வியாபாரம் பண்ண வந்திருக்கின்ற பணக்கார பையன் கொஞ்சநாள் ஆடிப் பார்த்து விட்டு திரும்ப ஊருக்குப் போய்விடுவான் என்று நினைத்தேன்.பரவாயில்லை கொடிமரம் நாட்டிவிட்டாய். கொடிபறக்க விடாமல் ஓயமாட்டாய். கீப் இட் அப் மை டியர்."

"அப்புறம் இங்கே உன்னை வந்து பார்க்க வந்ததில் ஒரு சுய நலமும் ஒரு உன் நலமும் கலந்திருக்கிறது."

"இந்த வேளையில் கேட்க வேண்டுமா என்றுதான் நினைத்துக் கொண்டிருந் தேன்." என்றான் கடிகாரத்தைப் பார்த்தவாறு.

கவிஞர் இராஜகை நிலவன்

"அட சும்மா சொல்லுப்பா இன்னும் நேரனிருக்கிறது."
"பரவாயில்லை நீ போய் எனக்குச் சிங்கப்பூரிலிருந்து போன் பண்ணுவா யல்லவா?"

"கண்டிப்பாக.... இப்படி நீ கேட்கும் போதுதான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சொல் என்ன சுய நலம்... என்ன என் நலம்?"

"ஒன்றுமில்லை. சிங்கப்பூரிலே ஒரு கிளையண்டை தொடர்பு கொண்டு கொஞ்சம் எக்ஸ் போர்ட் பண்ணினேன். போனிலேயே இ..மெயிலிலோ கிடைக்கமாட்டேன் என்கிறான். முடிந்தால் அவனைப் பார்த்துப் பேசி கொஞ்சம் வரவேண்டிய பணத்தை வசூல் செய்யணும்.அப்புறம் உன் நலம் பற்றிச் சொன்னேனில்லே... நேற்று ஒரு விசன்ஸ் புத்தகம் பார்தேன். ஆடு, மாடு தீவனம் தயாரிக்க புதிய உணவு வகை கலக்க மிகவும் குறைந்த விலையில் கண்டு பிடித்திருக்கிறர்களாம். அதை சிங்கப்பூரிலே இந்த அட்ரஸில் தான் (பையிலிருந்த காகிதத்தை எடுத்து) முதன் முதலாக அறிமுகம் படுத்துகிரார்களாம்."

"இதையும் பார்த்தாய் என்றால் உன் தயாரிப்பு செலவு, மற்றும் மூலதனம் போடுவதோடு தொழிலையும் வளர்த்துக் கொள்ள முடியும்."
"ஆமாம். ஷிப்பிங் கம்பெனி ஆரம்பிக்க சொன்னாயே என்னாயிற்று? கையிலிருந்த முகவரி காகிதத்தை அரசுவிடம் கொடுத்து விட்டு கேட்டான் திலக்

"நான் சிங்கப்பூர் போறதே இப்போது மெயினாக ஷிப்பிங் கம்பெனி விஷயமாகத் தான் போகிறேன். அங்கே ஒரு ஃபிரைட் ஃபார்வேர்ட் கம்பெனியோடு ஒரு அக்ரிமெண்ட் போட்டு என்னுடைய மறு பக்க ( கவுண்டர் பார்ட்) வெளி நாட்டு கம்பெனியாக மாற்றிக் கொண்டு அங்கிருந்து ஜப்பான் போய் ஓஸாகாவிலும் அதே கம்பெனியின் இன்னொரு கிளையிலும் கொஞ்சம் பேசிவிட்டு, சில வியாபாரங்களை முடித்து விட்டு வரலாம் என்றிருக்கிறேன்."

வெரிகுட், அரசு. வளர்ந்துகிட்டே போகணும். எங்களையெல்லாம் மறந்து விடாதேப்பா."

"திலக்.. என்னால் பெற்ற அம்மாவைக் கூட நான் மறந்து விட முடியும். என்ன செய்யப் போகிறேன் என்று கண்ணைக் கட்டி ஆற்றில் விட்டாற்போல இருந்த போது எனக்கு முழுக்க முழுக்க அடைக்கலம் தந்து, எனக்குத் தோள் தந்து... உன்னை மறக்கச் சொல்கிறாயா?" அரசுவின் கண்களில் நீர் முத்துகள் சரிந்து விட, "அட இத்றகெல்லாம் வீணாக கண் கலங்கிக் கொண்டு போப்பா. எல்லா வற்றையும் சிறப்பாக செய்து விட்டு வெற்றியோடு வா." என்றான் திலக்.

"நீ இருக்கும்போது எனக்கு எல்லாமே வெற்றிதான் திலக். கண்டிப்பாக இந்தப் பயணத்தில் உனக்கு வர வேண்டிய பணத்தை வசூலித்துக் கொண்டு உனக்கு நேரடியாக சிங்கப்பூர், ஒஸாகா ஆர்டர்கள் கொண்டு வருவேன். நீயும் என்னோடு வளர வேண்டமா?"

"எல்லாம் அந்த இறைவன் அருள் இருந்தால் எல்லாம் நல்லபடி நடக்கும் போய் வாப்பா." என்று திரும்பவும் அரசுவைக் கட்டிப்பிடித்து அணைத்து வழியனுப்பி விட்டு வெளியே வந்த போது பூனத்திடமிருந்து போன் வந்தது.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# முனைவர் க.ப. அறவாணன்

கட்டுரை

## தொடக்க வாழ்க்கை

இன்றைய திருவாரூர் மாவட்டம், குடவாசலை அடுத்த கடலங்குடி எனும் ஊரில் 9 ஆகத்து 1941 அன்று பிறந்தார் அருணாசலம் என்ற அறவாணன்.

## கல்வி



சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயின்றவர். "நன்னூலும் அதன் உரைகளும்" என்னும் ஆய்வுக்கட்டுரைக்காக எம்.லிட். பட்டம் பெற்றவர்.

## பணி

- தமிழ் விரிவுரையாளர், தூய சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.
- முதல்வர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.
- தமிழ்த் துணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
- ஆய்வுப்பேராசிரியர், செனகல் பல்கலைக்கழகம், செனகல்.
- தமிழ்ப்பேராசிரியர் & துறைத்தலைவர், லயோலா கல்லூரி, சென்னை.
- தமிழ்ப்பேராசிரியர் & தமிழியற்புலத்தலைவர், புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம், காலாப்பட்டு, புதுச்சேரி.
- துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிசேகபட்டி, திருநெல்வேலி.

## எழுதிய நூல்கள்

56 நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றில் சில வருமாறு;

## எழுதிய நூல்கள்

56 நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றில் சில வருமாறு;

- அவன் அவள் அது (சிறுகதைத்தொகுதி)
- அவளொரு பண்புத்தொகை (நெடுங்கதை)
- அற்றையநாள் காதலும் வீரமும் (முனைவர் பட்ட ஆய்வேடு);
- கவிதை கிழக்கும் மேற்கும்; 1975,
- காலப்போக்கும் கல்லூரிப்போக்கும் ♦ கல்வித்துறை உருப்பட
- சைனர்களின் தமிழிலக்கண நன்கொடை[3]
- தொல்காப்பிய ஒப்பியல்; 1975;
- தொல்காப்பியக் களஞ்சியம்; 1975; ♦ தமிழர் தடங்கல்; 1992 மே;
- தமிழர்தம் தலைமை வழிபாடு ♦ தமிழர்தம் மறுபக்கம்
- தமிழரின் தாயகம்
- தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்
- தமிழ்ச்சமுதாய நோய்கள் ♦ தமிழ்ச்சமுதாய வரலாறு- முதற்பகுதி
- தமிழ் மக்கள் வரலாறு[4] ♦ திராவிடர்
- படைப்பாளி + சமுதாயம் = இலக்கியம்;
- பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள்
- பாதையாகு பாறைகள்: வாழ்க்கை முன்னேற்ற வழிமுறைகள்; 1988 ♦ திசம்பர்;
- புரட்சிப்பொறிகள் (கவிதை)
- Collected Papers on Tamilogy

## பதிப்பித்த நூல்கள்

- அவிநயம்:மூலமும் உரையும்; 1975;

## இதழ் ஆசிரியர்

இவர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட இதழ்கள்

### இதழ் ஆசிரியர்

இவர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட இதழ்கள்
- அறிவியல் தமிழியம்
- தேடல்
- முடியும்
- கொங்கு

### விருதுகளும் கௌரவங்களும்

தமிழக அரசின் சிறந்த நூல்களுக்கான பரிசினை 3 முறை பெற்றுள்ளார். 1986ல் சிறந்த பேராசிரியர்களுக்கான விருது

2024 நவம்பரில் அறவாணனின் படைப்புகளை தமிழ்நாடு அரசு நாட்டுடமை ஆக்கி, அவரின் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத் தொகையாக ரூ 10 இலட்சம் வழங்கியது.

### மறைவு

சென்னை அய்யாவு நாயுடு காலனியில் வாழ்ந்துவந்த அறவாணன், 23 திசம்பர் 2018 அன்று தன் 78-ஆம் அகவையில் காலமானார்.

### அறவாணர் விருது

இவர் ஆண்டுதோறும் அறவாணர் விருது வழங்கி சான்றோரைப் பாராட்டி வருவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

நன்றி : https://ta.wikipedia.org

# நாளை நமதே

கவலையை

உன் காலுக்கு கீழ்

கொண்டு வா

தூக்கி சுமக்காதே

அகமும் தமிழே                    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com